அதிலே இடம் பெறவில்லை. இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதுபோன்ற பிளீச்சிங் பவுடர் தயாரிக்கக்கூடிய தொழிற்சாலை தொடங்குவதற்கு அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால் அவர்களுக்கு மாவட்ட தொழில் மையத்தின் மூலமாக கடன் உதவிகளைப் பெற்று குழுவாகவோ அல்லது கூட்டமைப்பின் மூலமாகவோ அவர்கள் தொடங்குவதற்கு அரசு உதவி செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. நா. சந்திரமோகன்.

திரு. நா. சந்திரமோகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 248,* திரு. சு. சிவராஜ், *மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்.*

248—

ஆதிதிராவிடர் நலத் துறை ஆரம்பப் பள்ளி

***36539—திரு. சு. சிவராஜ்:**

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ரிஷிவந்தியம் தொகுதி, பெரியபகண்டை காலனியில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் ஆரம்பப் பள்ளி தொடங்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 249,* திரு. வெ. ஏழுமலை, *மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*